# ஆரியப்படை கடந்த அறிவாலய நாயகனே!

## [கழக ஆட்சி ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாள் (07.05.2025)]

அரசியல் சட்டத்தின் அச்சாணியை முறிக்க அவ்வப்போது ஆணவ அரசியல்வாதிகளால் ஆபத்து ஏற்படும் போதெல்லாம், நீ தேனீயாய் மாறிக் கொட்டுகிறாய் !

திராவிட இன மக்களின் தீர்க்கதரிசியே! தீந்தமிழ் நாட்டின் திருக்குவளை தந்த திருவருட்செல்வனே! ஆரியப்படை கடந்த அறிவாலய நாயகனே! அண்ணாவின் அரிச்சுவடியைப் பாதுகாப்பவனே!

சாதனை நாயகனாய் நிமிர்ந்து நிற்கும் தளபதியே! எளிமையான செழுமையான சாமானியனின் சரிதம் படைப்பவனே! மானிட நெஞ்சங்களிலெல்லாம் நிரந்தர சிம்மாசனம் போட்டவனே! அனைத்து மக்களின் அமுதசுரபியாய் அவதரித்தவனே!

உனது ஆட்சி நான்கு ஆண்டுகள் கடந்து இன்று ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து பீடு நடை போடுகிறது.

சூரியனில் நெருப்பெடுத்து சூழ்ச்சிகளை வென்றவனே! சுயமரியாதைக் குழம்பில் சூடேற்றிச் சொரணை வர ஆட்சி நடத்துபவனே! சூத்திரர்கள் பேதம் நீங்கத் தமிழர்களுக்கெல்லாம் தனி விதி எழுதி வரும் தன்னனோரிலாத் தலைமகன் நீ!

நீ ஈரோட்டுக் குரு குலக் கல்வி கற்க, பகுத்தறிவுப் பாடசாலையில் பாதம் பதித்தாய்!

காஞ்சிக் கல்லூரியில் தமிழ் படித்து கழகத்தை வழிநடத்தும் காந்தர்வத் தலைவனே! திருக்குவளைத் தாய் மணிவயிற்றில் கருவுற்ற கலைஞரின் வழித்தோன்றல் நீ!

ஆரியத்தை வீழ்த்தெழுந்த அடலேறே! ஆர்ப்பரிக்கும் அலைகடலே! அஞ்சுகத்தாய் முத்துவேலர், ஆரூரார் அன்பளிப்பே!

சீறியெழும் சிங்கம் போல் திராவிடச் சீமைக்கே தலைவன் ஆனாய்! திராவிட மாடல் எனும் திருவிளக்கை ஏற்றி வைத்தவன் நீ! வடபுலத்து மானிடர்க்கும் வகுப்பு எடுக்கும் 'இந்தியா' எனும் கல்லூரிக்குத் தலைவனானாய் நீ! நாள்தோறும் பொற்கால முன்னேற்றப் பாதைநோக்கி நீ தருகின்ற நடைப் பயிற்சியால் … உன் ஆளுமையை சிகரத்தில் தூக்கி நிறுத்துகிறது!

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்…

இது இன்றைய தமிழ்நாட்டின் அஞ்சல்துறை தரும் ஒற்றை முகவரி! பத்துமாதம் சுமக்கும் ஒரு தாயின் தவவலிமையோ தன் மகப்பேறுக்கு மட்டுந்தான்! ஆனால் உனது தவவலிமையோ, ஒட்டு மொத்த தமிழினத்தின் உயிர்த்துடிப்பு!

எளியவனாம் முத்துவேல் பேரனுக்கு, 'இந்தியா'வின் இமயமலை தலை வணக்கம். வாக்காளர்கள் உனக்கு பரிசளித்ததோ செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முதல்வர் நாற்காலி. பதவி ஏற்று முடிந்த அடுத்த மணித்துளிகளிலே ஏழை மக்களின் கண்ணீர்த் துளிகளை உன் எழுதுகோல் விரல்களோ கைக்குட்டைக் கையெ முத்தால் துடைத்தெறிந்தன. தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்றார் ஏசு. ஆனால் உன் கோட்டையின் கதவுகளோ எந்நேரமும் தட்டாமலே திறந்திருக்கின்றன.

அக்கினிச் சிறகுகள் விரித்த அறிவாலயப் பறவை நீ! அல்லல்படுபவர்களுக்கெல்லாம் அரும்பசி போக்கும் ஆகாயக் கங்கை நீ! நந்தவன நறுமணப் பூவாய் நங்கையர்கள் வாய் பூக்க நானிலத்தில் இடம் பிடித்தவனே! நாள் தோறும் மக்களுக்கான விடியலைக் கீறும் சூரியக் கிழக்காய் உனது ஆட்சி தொடர்கிறது!

அன்னமிட்டுப் பசியாற்ற கைபடைத்த ஆதவனே! ஆலயக் கோயில்கள், ஆரம்பப் பள்ளிகள் தோறும் அமுதசுரபி படைத்த மணிமேகலை அன்னையாய் உருவெடுத்தவனே! கொடுத்துச் கொடுத்துச் சிவந்த குமணன் கையாய் சரிதம் பேச நிற்பவனே! பெண்ணினத்திற்குச் சிவப்புக் கம்பளம் விரித்துச் சிம்மாசனம் போட்ட கைதான் உன் கை!

கல்லூரிக் கனவுகளுக்கு கால்கள் முளைத்திட கதவுகளைத் திறந்து வைத்து காட்சியளிப்பவனே! பட்டி, தொட்டிகளில் ஆடு மாடுகளாய் மனித மந்தைகள் அடைபட்டுக் கிடந்த கிராமத் தொழுவங்கள் உன்னால் இன்று, …. பல்கலைக்கழகம் ஏறும் மாணவர் பட்டாளங்களைத் தயாரித்து அல்லவா மாற்றியிருக்கிறது.

நலிந்த மக்களுக்கெல்லாம் நனவு படைக்கும் நாத்திகனே! உடன்பிறப்புச் சமத்துவச் சுதந்திரத்தைப் பேசும் அண்ணாவின் வாரிசு நீ! நெஞ்சு பூரிக்க இல்லக் கிழத்திக்களுக்கு உரிமைத் தொகை வழங்கிட நிற்கும் உத்தம சோழன் நீ! நானிலத்திற்கான திட்டங்களை நங்கையர் குலத்திற்கு வழங்கிவரும் தளபதியே! நீயோ நாட்டின் முதலீடு! நலத்திட்டங்களின் உயிர்க்கூடு!

பேருந்துப் பயணங்களில் உழைக்கும் மகளிரினம் பெருமைகள் பேச வைக்கும் பெரியாரின் பேரன்

நீ நாள்தோறும் பெண்ணின உச்சரிப்பு உதடுகளால் உயிர்த்தெழுந்த எட்டாவது அதிசயம். உன் சந்தன மார்பில் விழும் புகழ் மாலைகளால் புவனத் தலைவன் என போற்றப்படுகிறாய்! பயணத் தடங்களிலெல்லாம் திசைகாட்டியாய் உச்சாடனம் செய்யப்படுகின்றாய்!! வறுமை நோயால் வெளியேறி அடமானமான ஐந்து பவுன் தங்க நகைகள் உன் உத்தரவால் விடுதலை பெற்றன.

உன் மடல் விரல்கள் வரைந்த ஓவியத்தால், கல்விக் கடல் கட்டுமரமாகிறது. சீமைக்கருவை மரங்களும், சில்வண்டு இசைக்கும் சின்னிச் செடிகளும் பூத்த கிராமங்களை வசந்த மாளிகைக்குள் அமர வைப்பவனே! வேலைக்குச் சென்று திரும்பும் மாதர்குல மணிமேகலைகளின் வேர்வை துடைக்கும் தோழியர் விடுதியாகிறாய்! அவர்களின் துயரத்தை விடை கொடுக்கும் மன நிம்மதிக்கான ஓய்வெடுக்கும் உட் பரிகையும் ஆகிறாய் !

பச்சிளம் பாலகர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் பசி தீர்க்கும் ஞானப்பால் ஊட்டுகிறாய்! தமிழ்மாந்தர் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தொலை நோக்குத் திட்டங்களுக்காய் ஒளி வீசி இலங்காபுரி அனுமனாய் உருவெடுக்கிறாய்.

மக்களின் வீடு தேடியே கூட்டுறவு வங்கிகள் திருப்பிக் கொடுத்துக் கை குலுக்குகின. உனது வருகை கண்ட நரிக்குறவர் இல்லங்களும் சமபந்தி உணவுக் கூடங்களாயின. நீ செல்வந்தர்கள் விரித்த சிவப்புக் கம்பளத்தில் நடந்து சிம்மாசனத்தில் ஆட்சி செய்யவில்லை.

மாற்றுத்திறனாளிகள் மனத்தோட்டத்தில் மல்லிகைப் பூவாய் சிரித்துக்கொண்டிருக்கிறாய். "செவிடன் என்று சொல்லாதே: ஊமை என்று உதாசீனப்படுத்தாதே." "குருடன் என்று குதர்க்கம் பேசாதே: முடவன் என்று முற்றுப்புள்ளி வைக்காதே! உடல் ஊனமுற்றவன் என்று அவர்களை உதாசீனப்படுத்தாதே! அவர்களை மாற்றுத் திறனாளிகள் என்று அழையுங்கள். இப்படிப் பாராட்டிய கலைஞர், அவர்களுக்கான தனி நாற்காலிபோட்டு இந்திய அரசியல் அரங்கத்தில் அமர வைத்து சட்டம் எழுதியவர்.

மானிடப் பிறப்பால் 'அலிகள்' என்று ஒதுக்கப்பட்டும் ….. ஒடுக்கப்பட்டும் …. வந்த சமுதாயத்தைத் தனது சீரிய அறிவுரையால் அரசாணையிட்டவர்தானே முத்தமிழ் அறிஞர் கலைஞர்! அவர்களைத் திருநம்பியர், திருநங்கையர் என அழையுங்கள் என்று வாரியம் அமைத்துக் கட்டிக் காத்தவரும் அவரே.

அந்த வாரியத்தில் பல்வேறு நன்மைகளை உருவாக்கிக் கம்பீர நடை போட முடிவெடுத்துச் சமுதாய ஊன்றுகோல் தந்திட தன் பேரன் உதயநிதி மூலம் கண்டு களித்துக் கொண்டிருப்பவனும் தொடர்ந்து நடை போட வைத்துக் கொண்டிருப்பவனும் தளபதி நீயே. இன்று அந்த மாற்றுத்திறனாளிகளின் மனங்களில் மரியாதை காண்பவன் நீ!

நீ கோட்டையை விட்டிறங்கி ஊர்வலம் வந்ததால்தான், கொரோனா நோயும் குழியிறங்கிப் படுத்துக் கொண்டது. உன் அமைச்சர் பட்டாளத்தை நீ அரண்மனை வாசியாக்கிட அரியாசனம் தந்திடவில்லை. கடந்தகால அமைச்சர்கள் குசேலர்களாகக் கோட்டைக்குச் சென்றார்கள். அவர்கள் திரும்பும் போதோ குபேரர்களாக வீட்டுக்கு வந்தார்கள். அவர்களின் உதவியாளர்கள் கூடத் தகர உண்டியல்களைத் தங்க உண்டியல்களாக்கிய வரலாறு உண்டு.

உன் அமைச்சர்களோ மக்கள் தந்த மனுக்களை வாங்கி மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என மகத்துவம் படைக்கிறார்கள். உன் ஆட்சிப் பணியாளர்களை குடிசைவாசிகளின் முகவரி கேட்க வைத்து செங்கோலை எல்லாம் வெண்சாமரம் வீசவைத்தாய் அவர்களோ, ஏழை, எளியமக்கள் மீது அக்கறை கொண்டு தீர்வு காணும் முயற்சியில் அதிசயம் படைக்கிறார்கள்.

உனது அமைச்சர்களை அன்றாடங் காய்ச்சிகளின் வீடுகளுக்குச் சென்று நாள்தோறும் துயரச் சிலுவைகளைச் சுமக்க வைக்கிறாய்! சான்றோர்க்கும், ஆன்றோருக்கும் சரித்திரம் பேச, எழுத சான்றாவணம் தயாரிக்கிறாய். அயோத்திதாசர், வ.உ.சி. பாரதி, பாரதிதாசன் பெரியார், அம்பேத்கர், அண்ணா, கலைஞர் இவர்களின் வாழ்க்கைச் சுவடிகளை உனது முகவரியால் நாள்தோறும் வாசிக்க வைக்கிறாய்.



நீயோ மழையில் குளிக்கிறாய், வெயிலில் வேர்வை ஆகிறாய், குளிரில் போர்வை ஆகிறாய் இருட்டை விழுங்கும் சூரிய விளக்காகவும் எரிகிறாய்! ஆம்! தமிழகத்தின் மின்சார மனிதனாய் எங்கும் பரவுகிறாய்! நீயோ தூக்கத்தைத் தொலைத்துவிட்டு தொண்டு செய்வதில் மட்டுமே மக்களின் பரிசு முத்தங்களை அன்றாடம் வாங்கியிருக்கிறாய்!

இனிமேல் ஆலயங்களில் ஆண்டவனைத் தமிழ்மொழியிலேயே மனிதர்கள் எல்லோரும் மாட்சிமைப் படுத்துவார்கள். நீ ஆள்பவரைக் காட்டிலும், ஆளப்படும் மக்கள் முக்கியம் என முரசு கொட்டுபவன். உன் பொன் உதடுகளிலிருந்து உதிரும் ஒவ்வொரு வார்த்தைகளும் மக்களை நோக்கியே தொலைநோக்குத் திட்டங்களாக வடிவெடுக்கின்றன. நீ சாமானிய மக்களுக்காகச் செங்கோலைச் சுழற்றி இராஜபாட்டையில் ஊர்வலம் வருபவன்.

நீ பல்லக்குத் தூக்கிகளால் பயணம் செய்பவன் அல்ல. நீ தூக்கும் உன் ஆட்சிப் பல்லக்கில்தான் மக்கள் வசந்தத்தை வருடுகிறார்கள். நீ இரவும், பகலும் கழலும் மனித பூமியாய் இருப்பதால்தான், தமிழும், தமிழரும் பேசப்படுகிறார்கள். நீ இலையுதிர்க் காலத்திலும், வசந்த காலத்திலும், இலட்சியத்தை மாற்றிக் கொள்ளாதவன்! அரசியலில் அதிசயம் படைத்த கலைஞர் பெற்ற இராஜாளிப் பறவையல்லவா!

பாலைவனங்களிலும், பள்ளத்தாக்குகளிலும் பீடபூமிகளிலும், சமவெளிகளிலும் சஞ்சாரம் செய்யும் சாகசப் பறவை. கொடியையும், கொள்கையையும் அடகு வைத்துக் கோமாளி வாழ்க்கை நடத்தும் அரசியல்வாதி அல்ல நீ. நீ அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசியல்சட்டம் எழுதும் தமிழ்நாட்டு அம்பேத்கர்!

உன் பொற்கால ஆட்சியில் கல்வி சிரபுஞ்சியாகிறது. இல்லந்தோறும் கல்வி என இலக்கணம் படைக்கிறது. மக்களைத் தேடி மருத்துவம் என மாநதியாகி, மக்கள் கடலில் கலக்கிறது. பால் பண்ணைகள் பொங்கி வெண்மைப் புரட்சி படைக்கிறது! வேளாண் திட்டங்களால் பசுமைப்புரட்சி வரலாறு எழுதுகிறது! தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டிற்குப் படைபெடுத்து வருவதால் பாதாளத்தில் படுத்துக் கிடந்த பொருளாதாரமோ எழுந்து இமயமலை ஏறத் தொடங்கி உள்ளது.

இந்திய மாநிலங்கள் எல்லாம் உன் வழித்தடங்களை உற்று நோக்கத் தொடங்கி உள்ளன. வடபுலத்து அரசியல் தலைமைகள் உன் வாழ்க்கை வரலாற்றைப் பொன்னேடுகளாகப் புரட்டிப் பார்க்கத் தொடங்கிவிட்டன. உன் அரசியல் எதிரிகள்கூட உன்னை அண்ணாந்து பார்க்க ஆரம்பித்துவிட்டனர்.

எழுத்து, காட்சி ஊடகங்கள் எல்லாம் உன் பொற்காலச் சாதனைகளையும், உன் உருவத்தையும் வெளியிடுவதற்கு வரிசைகட்டிக் கொண்டு உன் வாசலில் நிற்கின்றன. இமைகள் விரித்த உன் பார்வையில் கட்சியையும், ஆட்சியையும் சம பங்காக்கி இரு கண்களால் ஆதார் கணக்கெடுக்கிறாய். சட்டமன்றக் கூடத்தில் சாதனைகள் நிகழ்த்துகிறாய். மக்கள் மன்றத்திலோ உன் மகத்துவப் பணிகளால் மலர் மாலைகளால் சூட்டப்படுகிறாய். நீதிமன்றங்களால் உனது நேர்மையான ஆளுமைக்குப் பாராட்டுகளும், விருதுகளும் பரிசளிக்கப்படுகின்றன.

நீயோ சந்தனத்தின் பெருமை பேசுபவன் அல்ல! சாக்கடை மனிதர்களை முன்னேற்ற முகவரியாக்குபவன்! வேர்வையில் உழலும் உழைக்கின்ற சாமானிய மக்களுக்காகத்தான் கோட்டைக்கொடி பறக்கிறது! உன்னுடைய வரலாற்றுப் பதிவுகள் கின்னஸ் சாதனையை முறியடிக்கின்றன. உன்னுடைய வருகைக்காகக் கோட்டைக் கொத்தளக் கொடி, ' வா வா ' என்று நாள்தோறும் விழி மேல் விழி வைத்து வரவேற்பு நடத்திக் கொண்டிருக்கிறது.

உன் நுழைவால்தான் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய முப்பெரும் தலைவர்கள் முழக்கமிடுகிறார்கள். கொள்கைகளைக் கீறலிடும் கோப்புகளில் சமூகநீதி வெளிச்சம் பாய்ச்சுகிறது. உன் கையெழுத்தில்தான் பெரியார் உருவம் பதித்து மக்களாட்சி ஊர்வலத்தை தினமும் நடத்தி வருகிறாய்!

நீயோ கோபுரக் கலசங்களைப் பற்றிக் கொடியேற்றிக் குதூகலிப்பவன் அல்ல! உதிர்ந்து போன உலுத்தர்களைப் பற்றிப் பேசியும், வீணாக முத்துக் குளிப்பவனும் அல்ல. கோட்டையிலே அமர்ந்திருந்தாலும், குடிசை உலகத்தை மடியில் கிடத்தித் தாலாட்டுப் பாடும் தமிழ்நாட்டு லெனின் நீ. உன்னை வீழ்த்த எந்தக் கொம்பனாலும் குழி தோண்ட முடியாது. நீயோ குழி தோண்டிய வஞ்சக மனிதர்களையே உள்ளே தள்ளி, மேடு உயர்த்துபவன்!



**கவிஞர்**
**தமிழ்தாசன்**
**கழகத் தீர்மானக்குழுத் தலைவர்**

அந்த மேடையிலேயே மாநாட்டுப் பொதுக்கூட்டம் பேசிப் பழகியவன்! எந்த அரசியல் புயல் சூறாவளி அடித்தாலும் கழகத் தொண்டர்களோ, உடைந்து விழாத நாணற்புட்களாய் நிமிர்ந்து நிற்கிறார்கள்! கமலாலயங்கள் கவிழ்க்க நினைத்தாலும், கழகத் தொண்டர்களின் கட்டுமரம் ஏறி நீ கரை சேருபவன். திருவாரூர் கமலாலயக் குளத்தில் நீந்திக் கரையில் நின்று கைகொட்டி சிரித்த கலைஞரின் மகன் அல்லவா?

புரட்சிப் பூபாள, கல்யாணிகள் பாடி வாழும் எதிரிகளைக் கூட .சாரங்கா… நீலாம்பரி.. இராகம் பாட வைக்கும் அரசியல் இரசவாத வித்தையைக் கற்றவன் நீ! நீயோ இராஜ இராஜ சோழன் என்றால், தொண்டர்களாகிய நாங்கள் இராஜேந்திர சோழன்கள்.

தலைவன் நீ! தேர்தல் எனும் போர் வந்தால் அலெக்சாண்டர். தேவையான தத்துவம் என்றால், நாங்களோ சாக்ரடிஸ் வாரிசுகள் பிளாட்டோ அரிஸ்டாட்டில்….சிலர் வீதிக்கு தலைவராக இருப்பார்கள்.இன்னும் சிலரோ சாதிக்கு தலைவராக இருப்பார்கள். ஆனால், எங்கள் தளபதியான நீயோ நீதிக்குத் தலைவன். "ஆம்; சமூக நீதிக்குத் தலைவன்.. சாமானிய மக்களுக்குத் தலைவன், இருண்ட தமிழ்நாட்டில் வெளிச்சம் ஏற்றும் பரஞ்சோதி முகத் தலைவன் நீதான்.

நீ நெருக்கடிக்காலத் தீ மூட்டத்தில் எரிக்கப்பட்ட போதும், அந்தச் சாம்பலில் இருந்து பீறிட்டுடெழுந்து …வான வீதியில் வெற்றிக் கீதம் பாடிய ஃபீனிக்ஸ் பறவை என்பதை நாங்கள் மறந்து விடவில்லை. அழுக்கு நிறைந்த மூட மனிதர்களைத் துவைக்கும் பகுத்தறிவுச் சலவைக்கல் ஆகிறாய்… அதனால், நீயோ வாழும் பெரியார்!

அரசியலில் கனிவும், பதவியில் பணிவும் கொண்டதால் பழுதுபட்டு மழுங்கிய மனித மனங்களுக்குக் கூர்தீட்டும் சாணைக்கல் ஆகிறாய்… அதனால் நீயோ ஆளும் அண்ணா! சரித்திரத்தையே சாதனையாக்கத் தன்னைத்தானே செதுக்குவதில், பளிங்குக்கல் சிற்பியாகப் பழகிக் கொண்டவன். அதனால்தான் நீ கலைஞர் எனும் தலைவன் ஆகிறாய்! ஆம்! நீ கூழாங்கற்களை வைரக் கற்களாக மாற்றத்துடிப்பவன்.

உலகில் விடுமுறை இல்லாத ஒரே வேலைக்காரன் சூரியன் என்றால், நீயோ அவனின் நகல்!

**நீ வாழ்க!! நீ வெல்க!!!**



கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் தலைமையில் வீறுநடை போடும் திராவிட மாடல் அரசு 4 ஆண்டுகளை நிறைவு செய்து 5ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நாளில் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் பேரூர் தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சியில் சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் நகரச் செயலாளர் சி.கே. அன்பு, ஆராஞ்சி எ.எஸ்.ஆறுமுகம், சி.கே.பன்னீர்செல்வம், சரவணன், வினோத், சின்னா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# "நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு" கழக ஆட்சியின் சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில் "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி, நாடே பார்த்து வியக்கும் வகையில் 4 ஆண்டுகளில் ஈடில்லா சாதனைகளை படைத்து இந்தியாவின் நம்பர் 1. முதல்வர் என்ற வரலாற்று சரித்திரத்தை படைத்து, நல்லாட்சி நடத்தி வரும் "மக்களின் முதல்வர்" நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்காகவும் ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களுக்கு விளக்கிடும் வகையில்

"நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு" என்ற தலைப்பில் திருப்பத்தூர் மாவட்டத்தில் மே 08-ஆம் தேதி முதல் மே 13-ஆம் தேதி வரை பொதுக் கூட்டங்களை கீழ்க்கண்ட ஒன்றிய - நகர கழகங்களில் கீழ்க்கண்ட தேதிகளில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி சிறப்பு பேச்சாளர்களைக்கொண்டு நடத்தப்பட உள்ளது.

| வ.எண் | தேதி | பேச்சாளர் | இடம் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|---|
| 1 | 08.05.2025 வியாழக்கிழமை | கவிஞர் ஆ.தே.முருகையன் 9597366607 | பள்ளிக்குப்பம் குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் 9894240440 |
| 2 | | சாவல்பூண்டி மா.சுந்தரேசன் 9443685882 | நரியனேரி கந்திலி மேற்கு ஒன்றியம் 9443506093 |
| 3 | | ஏ.பாலமுருகன் 9360779757 | ஆண்டியப்பனூர் திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் 9994266057 |
| 4 | | லயோலா த.ராஜசேகர் 9786553177 | கெஜல்நாயக்கன்பட்டி கந்திலி தெற்கு ஒன்றியம் 9944655165 |
| 5 | 09.05.2025 வெள்ளிக்கிழமை | மலர் மு.கருணாநிதி 9444021151 | அரங்கல்துருகம் மாதனூர் மேற்கு ஒன்றியம் 9443007498 |
| 6 | | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ் 9717154177 | குப்பம்பட்டு அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் 8012979240 |
| 7 | | தக்கோலம் ந.தேவபாலன் 9994242872 | கோட்டைத் தெரு திருப்பத்தூர் நகரம் 9443626100 |
| 8 | | ஆற்காடு அகிலன் 9444268424 | கொத்தூர் நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் 9443203776 |
| 9 | 10.05.2025 சனிக்கிழமை | ஏ.பாலமுருகன் 9360779757 | கீழ்முருகை மாதனூர் கிழக்கு ஒன்றியம் 9487105186 |
| 10 | | கவிஞர் ஆ.தே.முருகையன் 9597366607 | காக்கனாம்பாளையம் திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் 9894830020 |
| 11 | | சாவல்பூண்டி மா.சுந்தரேசன் 9443685882 | தும்பேரி நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் 8489875553 |
| 12 | | லயோலா த.ராஜசேகர் 9786553177 | புத்துக்கோயில் ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் 9600973415 |
| 13 | 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ் 9717154177 | மதனாஞ்சேரி ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் 9500115875 |
| 14 | | போஸ்.வெங்கட் 9841879232 | விசமங்கலம் கந்திலி கிழக்கு ஒன்றியம் 9944187646 |
| 15 | | ந.தேவபாலன் வி.வேல்முருகன் | நிம்மியம்பட்டு ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் 9751555700 |
| 16 | | ஆற்காடு அகிலன் 9444268424 | மூக்கனூர் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் 9865754298 |
| 17 | 12.05.2025 திங்கட்கிழமை | கவிஞர் ஆ.தே.முருகையன் 9597366607 | பன்னீர்செல்வம் நகர் ஆம்பூர் நகரம் 9894379440 |
| 18 | | ஏ.பாலமுருகன் 9360779757 | செவ்வாத்தூர் கந்திலி மத்தியம் ஒன்றியம் 9443227059 |
| 19 | | லயோலா த.ராஜசேகர் 9786553177 | ஜின்னா சர்க்கில் வாணியம்பாடி நகரம் 9443229828 |
| 20 | 13.05.2025 செவ்வாய்க்கிழமை | சாவல்பூண்டி மா.சுந்தரேசன் 9443685882 | பக்கிரிதக்கா ஜோலார்பேட்டை மத்தியம் ஒன்றியம் 9487490754 |
| 21 | | உ.சீனிவாசன் 9943828899 | குடியானகுப்பம் ஜோலார்பேட்டை நகரம் 9443099197 |

எனவே, அந்தந்த ஒன்றிய - நகர கழகச் செயலாளர்கள், மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் தொடர் பொதுக்கூட்டங்களை மற்றும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்களில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் தந்து, அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து மிகவும் சிறப்பான முறையில் இக்கூட்டங்களை ஏற்பாடு செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.